SRI LANKA

## இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் II பரீட்சை – ஜனவரி 2021

## பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்

## (203) வியாபாரச் சட்டம் (BLA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் II பரீட்சை – ஜனவரி 2021

## (203) வியாபாரச் சட்டம்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

1.1 (4)

1.2 (2)

1.3 (4)

1.4 (3)

1.5 (2)

1.6 (2)

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்,)*
*(12 புள்ளிகள்)*

1.7 சரி

1.8 பிழை

1.9 பிழை

*(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள்,)*
*(03 புள்ளிகள்)*

1.10 **விற்பனையாளருக்குரிய நிவாரணங்கள்.**

**பொருட்களுக்கு எதிராக:**

(1) பொருட்களை மீளப்பெறுவதற்கான உரிமை மற்றும் தக்க வைத்துக் கொள்வதற்கான உரிமை.

(2) மீள் விற்பனை செல்வதற்கான உரிமை.

(3) இடை வழியில் தடுப்பதற்கான உரிமை.

**கொள்வனவாளருக்கு எதிரான நிவாரணங்கள்:**

(1) ஏற்றுக்கொள்ளாமைக்கான நடவடிக்கை.

(2) கொள்வனவு விலையை மீளப்பெறுவதற்கான உரிமை.

**1.11 பொருள் விற்பனை ஒப்பந்தமொன்றில் இருக்க வேண்டிய அடிப்படை கூறுகள்.**

(1) ஒப்பந்த விடயம் கட்டாயம் பொருளாக இருத்தல்.

(2) விற்பனையாளன் பொருளின் உரிமையை கொள்வனவாளனுக்கு மாற்றுதல் Or மாற்ற இணங்குதல்.

(3) ஒப்பந்தமானது பிரதிபயனுக்காக மேற்கொள்ளப்பட்டிருத்தல், அதாவது விலை குறிக்கப்படல்.

**1.12 கொடைமுனைவு மறுக்கப்படுகின்ற முறைகள்.**

(1) வெளிப்படையான மறுத்தலால்.

(2) கொடைமுனைவு செய்யப்பட்டவனால் மேற்க்கொள்ளப்படும் எதிர்க் கொடைமுனைவு.

**1.13 பதிவு செய்யப்பட்ட வியாபார குறியை உடைய உரிமையாளருக்குரிய உரிமைகள்.**

(1) குறியீட்டை பயன்படுத்துவதற்கான உரிமை.

(2) உரிமையை மாற்றுவதற்கான உரிமை.

(3) ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கான உரிமை.

**1.14 சர்வதேச வர்த்தக பிணக்குகளை தீர்ப்பதற்கான பிரதான முறைகள்.**

(1) நீதி முறையில் பிணக்கு தீர்ப்பு.

(2) மாற்று முறை பிணக்கு தீர்ப்பு.

aat SRI LANKA

***(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்)***
***(10 புள்ளிகள்)***

***(25 புள்ளிகள்)***

***A பகுதி முடிவு***

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 02 - பொருள் விற்பனை ஒப்பந்தச் சட்டம்**

(அ) பொருள் விற்பனை ஒப்பந்தச் சட்டத்தின் படி, பொருட்கள் விபரம், மற்றும் மாதிரி அடிப்படையில் விற்கும் போது பொருள் மாதிரிக்கு மட்டும் இன்றின் விவரணத்துடன் ஒத்திருத்தல் அவசியம்.
(உட்க்கிடையான நிபந்தனை)

தரப்பட்டுள்ள விடயத்திற்கு அமைய சஞ்ஜய 500 பொதிகள் மஞ்சளை பண்டாரவுக்கு விற்றான். மாதிரியை காண்பித்த சஞ்ஜய இம் மஞ்சள் இலங்கையில் உற்பத்தி செய்யப் பட்டவை என்றும் பண்டாரவுக்கு விபரித்தான். ஆனால் பண்டார பரீட்சித்த போது அம்மஞ்சள் பொதிகளில் 200 மட்டுமே இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றும் 300 பொதிகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தொடர்பாக கண்டறியப்படது. அந்த வகையில் சஞ்ஜய பொருள் விற்பனை சட்டத்தை மீறியுள்ளான். எனவே பண்டார சஞ்ஜயவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும். மஞ்சள் பொதிகளை நிராகரிக்கவும் உரிமை உண்டு.

***(06 புள்ளிகள்)***

(ஆ) பொருள் விற்பனை ஒப்பந்தச் சட்டத்தின்படி, பொருட்கள் விவரணத்தின் அடிப்படையில் விற்க்கும் போது விற்க்கப்பட்ட பொருள்கள் குறிப்பிடப்பட்ட விவரணத்துக்கு ஒத்திருத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (உட்கிடையான நிபந்தனை)

தரப்பட்டுள்ள விடயத்திற்க்கு அமைய, அமரிஸ் சஞ்ஜய உடனான ஒப்பந்தத்தில் 1000 பொதிகள் மஞ்சளை பெற தொலைபேசியில் கட்டளையிட்டான். மேலும் அவர்களின் தொலைபேசி உறையாடலில் சஞ்ஜய குறித்த மஞ்சளானது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது. என்றும் ஒரு போதும் அமரிஸ் மாதிரியையோ விவரணத்தையோ பார்வையிடவில்லை. பின்னர் அமிரிஸீக்கு தெரிய வந்ததாவது அனைத்து மஞ்சள் பொதிகளும் இந்திய உற்பத்தி பொருள்கள் எனவும் ஒருபோதும் விவரணத்துடன் ஒத்திருக்கவும் இல்லை. இதன் அடிப்படையில் சஞ்ஜய பொருள் விற்பனைச் சட்டத்தி பிரிவு 14ஐ மீறியுள்ளான். எனவே அமரிஸ் சஞ்ஜயாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியும். இச் சந்தர்ப்பத்தில் அமரிஸ் மஞ்சளை ஏற்காமல் மறுக்கலாம் ஏனெனில் சஞ்ஜய உட்கிடையான நிபந்தனையை மீறியுள்ளான்.

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| அத்தியாயம் 04 - முகவராண்மைச் சட்டம் |
|---|

அவசர தேவைக் காரணமாக முகவராண்மை தோற்றம் பெறல் முகவராண்மை உறவு முறையை ஏற்படுத்தும் காரணி ஆகும். இம்முறையில் முதல்வர் முகவருக்கிடையில் முகவராண்மை தோற்றம் பெறுதலானது ஒரு அவசர நிலையின் போதே ஏற்படும் அதாவது முகவருக்கு முதல்வரை தொடர்பு கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஆகும். இச்சந்தர்ப்பத்தில் முதல்வர் சார்பான முகவர் அவசர நிலைக் காரணமாக தோற்றம் பெறுவார். எனவே முகவருடைய செயற்பாடுகளுக்கு முதல்வர் பொறுப்பாவார். வழங்கப்பட்ட தகவலின் படி, பொலன்னறுவையில் வசிக்கும் சிறிபால 10 000 தயிர் சட்டிகளை கொழும்பு புகையிரதத்திற்கு அனுப்ப பொலன்னறுவை புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கிறான். ஆகவே புகையிரத நிலையம் முகவர் அல்ல போக்குவரத்து பிரதிநிதி மட்டுமே ஆனாலும் பின்பு புகையிரத சாரதி அவசர நிலைமை காரணமாக சிறிபாலவின் முகவராக செயற்பட வேண்டிற்று.
இந்த நிலையில் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் சிறிபால புகையிரத சாரதியின் ∴ நிலையத்தின் அதிபராக செயற்பட வேண்டும்.

**1) முதல்வருடைய தகவல்களை பெறமுடியாதவாறு அவசர நிலை ஒன்று இருத்தல்.**
வினாவின் படி, புகையிரத சாரதி 10 000 தயிர் சட்டிகளையும் அதன் விலையிலும் குறைந்த விலையில் விற்பனை செய்தாய் ஏனெனின் தயிர் மிக மோசமான நிலையில் பழுதடைய போகிறது என்பதால்,

**2) குறித்த நடவடிக்கை அவசிய வணிக தேவையாக காணப்பட்ட வேண்டும்.**
இங்கு போக்குவரத்து தாமதமானதால் தயிர் பழுதடையும் நிலைக்கு வந்துள்ளது.

**3) முகவர் முதல்வருக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் நடத்தல் வேண்டும்.**
இங்கு புகையிரத சாரதி சிறிபாலவை தொடர்பு கொண்ட முனைந்தாலும் அது சாத்தியப்பட இல்லை.

**4) முகவரின் நடவடிக்கைகள் சாதாரணமாக இருத்தல் வேண்டும்.**
இங்கு புகையிரத பாதை புனரமைக்கு 5 அல்லது 6 நாட்கள் செல்லும் என்ற நிலையிலேயே தயிர் பழுதடைய இருப்பதாலுமே உண்மை விலைக்கும் குறைவான விலையில் விற்றார்.

**5) முதல்வருக்கு முதலில் எந்த நிபந்தனைகளும் வழங்கப்படாமல் இருத்தல் வேண்டும்.** இங்கு பொலன்னறுவையில் இருக்கும் சிறிபால 10 000 தயிர் சட்டிகளை புகையிரத்தில் கொழும்புக்கு கொண்டு செல்ல மட்டுமே கூறுகிறாறே தவிர அவற்றை அதன் விலையிலும் குறைத்து விற்க அனுமதி வழங்கவில்லை.

**வழக்குகள் :** ***G.N Railway Vs Swarfield***
***Springer Vs Great Western Railway***
***Prager Vs Blackspiel***
***Stamp and Heacock Ltd***

***(10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| அத்தியாயம் 05 - கம்பனிச் சட்டம் |
|---|

பங்குடமை சட்டத்திற்க்கு அமைவாக பங்குடமை ஒன்றிலுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும் ஏனைய பங்காளருக்கு முகவராகச் செயற்படுவர். ஒரு பங்காளர் பங்குடமையின் நோக்கத்துக்காகஉண்மையான அதிகாரத்தை வெளிப்படையான அதிகாரத்தை பயன்படுத்தி செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

ஒரு பங்காளர் அவருடைய உண்மையான அல்லது வெளிப்படையான அதிகாரத்தின் அடிப்படையில் மற்றைய பங்காளரின் அனுமதி இன்றின் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டார் எனில் ஏனைய பங்காளரும் அவ்வொப்பந்தத்துடன் பிணைக்கப்படுவர்.

இங்கு வழங்கப்பட்ட கூற்றுகளின் அடிப்படையில் A யும் B கடன் ஒன்றை பெற்று வரவேற்பு மண்டபம் ஒன்றை வாங்கியதானது ஒரு பங்குடமைச் செயற்பாடாகும். ஆகவே C என்பவர் கடன் பொறுப்பில் இருந்து விடுபட முடியாது அவருடைய சம்மதமின்றி கடன் எடுக்கப்பட்டிருப்பினும் எனவே PQ நிதி நிறுவனத்தின் கடன் கோரிக்கை வலிமையானது A,B எனும் பங்காளருடன் C யும் இணைந்து கடனை தீர்க்க வேண்டும்.

**வழக்குகள்** : ***Mercantile Credit Co. Ltd. Vs Garrod (1962)***
***Samuel Gnanam and Others Vs Ismail Lebbe***

***(07 புள்ளிகள்)***

**(ஆ)**

1) ஒரு பங்காளர் சித்த சுயாதீனமற்றவராகும் போது
2) பங்காளர் ஒருவர் பங்குடமை ஒப்பந்தத்தை மீறும் போது
3) தொடர்ந்தும் பங்குடமை நட்டத்தை ஈட்டும் போது
4) நீதிமன்றமானது பங்குடமையை கலைத்தலே நியாயமானது என கருதும் போது
5) ஒரு பங்காளர் பங்குடமையை ஒப்பந்தப்பட செயற்பட முழுமையாக இயலாமல் போதல்
6) பங்காளர் ஒருவர் பங்குடமை உடன்படிக்கைக்கு எதிராக மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

| அத்தியாயம் 06 - கைமாற்றத்தக்க சாதனங்களுக்கான சட்டம் |
|---|

(அ)

**வரையுனர்** - இந்த மாற்றுண்டியலின் வரையுனர், ரஞ்ஜன் சிவகணேஸ் ஆவார். சீத்தா ரணவக்க பெரொவுக்கு ரூ. 80 000 செலுத்துவதாக கட்டளையை வழங்கியவர்.

**வரையுனி** - சீத்தா ரணவக்க வரையுனி ஆவார். இவர் உண்டியலில் குறித்த தொகையை ரஜீவ் சில்வாவுக்கு செலுத்த பொறுப்புடையவர்.

**பெறுனர்** - ரஜீவ் சில்வா இவ்வுண்டியலின் பெறுனர் ஆவார். இவர் ரூ. 80 000 ஐ பெற உரித்துடையவர்.

*(03 புள்ளிகள்)*

**(ஆ) செல்லுப்படியான மாற்றுண்டியல் ஒன்றின் பண்புகள்**

1. இது கட்டாயமாக எழுத்து மூலமானது
2. இது நிபந்தனை அற்ற கட்டளையாக
3. இதை பிறபிப்பவர் கையொப்பம் இட்டிருத்தல்
4. வரையுனியை குறிப்பிட்டு காட்டல் வேண்டும்
5. சரியான பெறுமதி குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்
6. பெறுனரை சரியாக குறிப்பிடல் வேண்டும்
7. சரியாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய திகதி குறிப்பிட வேண்டும்

*(04 புள்ளிகள்)*

SRI LANKA

**(இ) மாற்றுண்டியலுக்கும் காசோலைக்கும் இடையேயான வேறுபாடுகள் :**

| மாற்றுண்டியல் | காசோலை |
|---|---|
| குறித்த தினத்தில் அல்லது எதிர்காலமொன்றில் கட்டளைக்கு அமைவாக செலுத்துக என்று எழுபட வேண்டும். | கட்டளைக்கு மட்டுமே என்று எழுதப்பட வேண்டும். |
| வரையுனி வங்கியாக இருத்தல் அவசியமில்லை | வரையுனி வங்கியாகவே இருக்கும். |
| மாற்றுண்டியலை குறுக்குக் கோடிட முடியாது. | காசோலைகள் குறுக்குக் கோடிடலாம். |
| மாற்றுண்டியலை ஏற்றுக்கொள்வது அவசியம். | காசோலையை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. |

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| அத்தியாயம் 10 - சர்வதேச வர்த்தகம் தொடர்பான குற்றங்கள். |
|---|

**(அ) இலங்கை இலத்திரனியல் பரிவர்தனைச் சட்டத்தின் பிரதான நோக்கங்கள் :**

1) இலத்திரனியல் ஒப்பந்தகளை அறிந்துக் கொள்ளலும், வசதியளித்தலும்.
2) இலத்திரனியல் முறையில் தொடர்பு கொள்ளல், தகவல் அனுப்புதல், ஆவணங்களை அனுப்ப வசதிகளை மேற்க்கொள்ளல்.
3) சட்ட நடவடிக்கைகளை மேற்க்கொள்ள.
4) இலத்திரனியல் சேவை வழங்குநர்களை அடையாளம் காண

*(03 புள்ளிகள்)*

**(ஆ)**

1) உயில் மற்றும் ஒருவரின் இறுதி விருப்பாவணம்
2) தொலைத் தொடர்பு முறைக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம்
3) அட்ரோனித்தத்துவம்
4) நம்பிக்கை
5) மாற்றுண்டியல்
6) அசையாத சொத்து விற்பனை ஒப்பந்தம்

*(02 புள்ளிகள்)*

**(இ)**

1) நிறுவனங்களுக்கிடையிலான தன்னாதிக்கமான போட்டி நிலைமைகளை கட்டுப்படுத்த அல்லது ஒழிக்க. நிறுவனங்களின் பொருள் விலைகளை நிர்ணயிக்கவும் அசாதாரண விலை மற்றும் அசாதாரண போட்கள் நிறுவனங்களில் அல்லது சர்வதேச வியாபாரத்தில் காணப்படும் போது அவற்றை கட்டுப்படுத்த
2) சர்வாதிகார போட்டி நிலைமைகளை விசாரிக்கவும் உச்ச இலாபத்தைபெற அல்லது சந்தையில் நிலைக்க அசாதாரணமான முறையில் பொருளின் விலையை குறைத்தும் தரம் குறைந்த பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களின் செயற்பாடுகளை விசாரிக்கவும்.
3) நிறுவனங்களுக்கிடையில்ஒரு வினைத்திறனான போட்டி நிலைமையை உருவாக்குவதற்க்கு
4) சந்தைக்கு விநியோகிக்கப்படும் வேவ்வேறு வகையான பொருட்கள், சேவைகளின் தரம், கிடைப்பனவு மற்றும் விலை என்பவற்றை உறுதிபடுத்தி நுகர்வோரை பாதுகாக்க.
5) கொள்வனவுக்குரிய பொருட்கள் சேவைகளின் தரம், அளவு, பாதுகாப்பு, தூய்மை, தர நிர்ணையம் மற்றும் விலை பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு வழங்கவதுடன் அவர்களை அறிவூட்டலும்.
6) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறைபாடுகளையும் விசாரணைகளையும் நடாத்துதல்.

*(05 புள்ளிகள்*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

| ***B பகுதி முடிவு*** |
|---|

aat SRI LANKA

## வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

**அத்தியாயம் 08 - காப்புறுதிச் சட்டமும், வாடகைக் கொள்வனவு மற்றும் குத்தகைச் சட்டமும்**

***(அ)***

இத்தகவலின் படி தனுவும் இராமும் ஜனவரி 15. 2020 இல் தமது திருமணத்தை நடத்த தீர்மானித்து ஒரு ஹோட்டலில் திருமண மண்டபத்தை குறித்த அளவு முற்பணத்தை செலுத்தி முன்பதிவு செய்தனர். இருப்பினும் இலங்கையில் பரவிய கோவிட் - 19 இரண்டாம் அலைக் காரணமாக இலங்கை அரசாங்கம் ஜனவரி 13. 2020க்கு பிறகு எந்தவொரு கொண்டாட்டமும், வைபவங்களும் மறு அறிவிப்பு வரை நடத்த கூடாது என தடைவிதித்தது. தனது இராம் மற்றும் ஹோட்டல் முகாமையாளரிடையே வாய்மொழி மூலமான ஒப்பந்தமே காணப்பட்டது. முற்பணத்துக்கான பற்றுச் சீட்டு மட்டும் எழுத்து மூலம் காணப்பட்ட சான்றாகும்.

குறித்த தரப்பினரிடையேயான ஒப்பந்தமானது நிலைகுலைவு காரணமாக முடிவடைந்து விட்டது. குறித்த ஒப்பந்தத்தை செயற்படுத்த முடியாது ஏனெனில் ஒப்பந்தமானது அரசாங்க தலையீடு காரணமாக நிலைகுலைவினால் முடிவடைந்தது

**வழக்கு :** ***Avery Vs. Bowden***

தினு மற்றும் ராம் ஒப்பந்தத்தை நிலைகுலைவு காரணமாக நிறுத்தி இருப்பினும் ஹோட்டலானது முற்பணத்தை திருப்பிச் செலுத்த வேண்டும்.

***(07 புள்ளிகள்)***

**(ஆ)**

வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய ராம் தனது காருக்கான காப்புறுதியை ஜனயித காப்புறுதி கம்பனியிடம் பெற்றுக் கொள்ள முனைந்த போது கம்பனி ராமிடம் நீங்கள் அல்லது காரை செலுத்துபவர் ஏதாவது தண்டணைக்குரிய குற்றம் புரிந்துள்ளீர்களா என வினவியது. ராம் தொழிநுட்ப குற்றம் ஒன்றை புரிந்து 5 வருட தண்டனை பெற்றிருந்தாலும் இல்லை என பதிலளித்தார். கம்பனி அவருடைய காப்புறுதி கோரிக்கையை நிராகரித்தது.

காப்புறுதி தத்துவங்களில் உச்ச நன் நம்பிக்கை தத்துவம் படி காப்புறுதி பெறுநர் அபாயம் ஏற்படக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் முழுமையான வெளிப்படுத்தலை வழங்க வேண்டும் ஏனெனில் காப்பிடுநருக்கு விடயப் பொருள் தொடர்பில் எதுவும் தெரிந்திருக்காததாலாகும். ஆனாலும் "*Buultjens Vs. Ceylon Insurance Co. Ltd. (1960)*" தீர்ப்பின் படி காப்புறுதி கம்பனி நட்டஈட்டை செலுத்த வேண்டும் என உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. அதாவது இங்கு இடர் ஏற்படக்கூடிய விடயங்களை வெளிப்படுத்தல்களானது தெளிவாக இன்மையாலேயே ஆகும். எனவே ஜனயித காப்புறுதி கம்பனியும் ஒப்பந்த முனைவை நிராகரிக்க முடியாது.

***(05 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(இ)**
இதன்படி ராம் தனது மோட்டார் காருக்கு பூரணக் காப்புறுதி ஒன்றை பெற்றுள்ள போதிலும் குறித்த காப்புறுதி ஒப்பந்தம் பொதுப் போராட்டம் பயங்கரவாத இழப்புக்கள் உள்ளடக்கப்படாவிடின் காருக்கு ஏற்பட்ட சேதத்துக்கான இழப்பீட்டை பெற ராமுக்கு முடியாது.

இதற்கான காரணம் அண்மைக் காரணத்தத்துவத்தின் படி காப்புறுதி செய்யப்படும் ஆதனமானது அல்லது ஆயுளானது ஒப்பந்தத்தில் குறித்த காரணத்தால் சேதமடைந்தால் மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் என்பதால் காப்புறுதி அளிப்பவர் குறித்த இடருக்கு காப்புறுதி பெற்றவர் காப்புறுதியை பெற்றால் மட்டுமே இழப்பீடு செலுத்துவார்.

***(05 புள்ளிகள்)***

| அத்தியாயம் 07 - தொழிற் சட்டம் |
|---|

**(ஆ)**
பூட்மார்ட் சிறப்புக்கடையானது 10 ஊழியர்களை மட்டும் கொண்ட ஒரு நடுத்தர அளவு நிறுவனமாகும். எனவே இத்தகவலின் படி ஊழியர்களை பணிநீக்க சட்டமான 1954ம் ஆண்டு 19ம் இலக்க தொழில் முடிவுறுத்தும் சட்டமானது 15 ஊழியர்களை விட அதிகமானாலே பொருந்தும். மேலும் ஹமீட் பூட்மார்டில் 15 நவம்பர் 2020 இல் இணைந்து 01 மார்ச் 2021 வரை 1/2 மாதங்கள் மட்டுமே தொழில் புரிந்துள்ளார். அதாவது 180 நாட்களுக்கு குறைவான சேவைக்காலம். 1954ம் ஆண்டு 19ம் இலக்க தொழில் முடிவுறுத்த சட்டத்தின் விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக ஊழியர் ஒருவர் 180 நாட்களுக்கு முடிவுறாத சேவைக்காலம் கொண்ட ஊழியர்களும் உள்வாங்கப்படமாட்டார்கள். எவ்வாறாயினும் தனியார்துறை ஊழியர் ஒருவரின் பணியை முடிவுறுத்துவதற்க்கு முறையான உள்ளக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை நடாத்துவது கட்டாயமாகும்.

இங்கு பூட்மாட்டின் முகாமையாளர் அமீடை முறையான உள்ளக ஒழுக்காற்றை மேற்கொள்ளாமலே தொழிலை முடிவுறுத்தியதால். அமீட் 19ம் இலக்க 1954ம் ஆண்டு தொழில் முடிவுறுத்தும் விசேட ஏற்பாடுகளுக்கு பிணைக்கப்படாவிடினும் முறையான உள்ளக ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளுமாறு பணிக்கலாம்.

***(08 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

| ***C பகுதி முடிவு*** |
|---|

aat SRI LANKA

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*